# சைவசித்தாந்தக் கருத்தியல்களின் வெளிப்பாட்டில் திருமந்திரத்தின் மொழிநடைத்திறன்

ர. சுபதினி

**ஆய்வுச்சுருக்கம்**

*சைவத் தமிழர்களாகிய நமக்கு ஆதாரநூலாக சிவபரத்துவத்தைப் போற்றும் திருநூலாக திருமந்திரம் காணப்படுகிறது. இத்திருமந்திரம் என்னும் நூலிலுள்ள சைவசித்தாந்தக் கருத்தியல்களை அத்திருப்பாடல் மொழிநடைகளினூடாக எடுத்துக் காட்டுவதே இவ் ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இறைவனுடைய இயல்புகளை பதி, பசு, பாசம் என்ற கருத்தியல்புகளின் பின்னணியில், திருமூலர் தான் கையாண்ட மொழிநடைக் கூறுகளின் அடிப்படையில் எவ்வாறு புலப்படுத்துகிறார் என்பதை வெளிக் கொணர்வதே இவ்வாய்வுக்குரிய முக்கிய அம்சமாகும். இம் மொழிக்கூறுகளினூடாக சைவசித்தாந்தக் கருத்துக்கள் இழையோடிக் காணப்படுவதை இக்கட்டுரையானது முன்னெடுத்துக் காட்டுகிறது. மேலும் இச்சிந்தனைகள் பற்றிய ஆய்வானது விபரண ஆய்வு முறையினூடாகவும், விளக்கமுறை ஆய்வினூடாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. இதற்குத் தேவையான உத்தி முறைகளாக சொற்பாகுபாடுகள், நயமிக்க செயற்றொடர்கள், வாக்கியப் பயன்பாட்டு முறைமைகள், கருத்துப் புலப்பாட்டு முறைகள், உணர்ச்சி நடைக்கூறுகள், உரையாடல் பண்புகள், எளிமையாக்கம் எனப் பலவகைகளில் ஆய்வு முடிவுகள் இங்கு தரப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் பல இலக்கிய மீளாய்வுகள் இவ்வாய்வுக்குரிய முடிவுகளை வெளிப்படுத்துவதில் தேவையான தகவல்களைத் தந்துதவியுள்ளன. எனவே திருமந்திரப் பாடல்களில் காணப்படும் சைவசித்தாந்தக் கருத்தியல்களை மொழிநடைக்கூறுகளினூடாக வெளிப்படுத்தியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.*

**திறவுச்சொற்கள்:** சைவசித்தாந்தம். மொழிநடை. எளிமையாக்கம். விபரண ஆய்வு. திருமந்திரம்

**அறிமுகம்**

சைவப் பெருமக்களது ஆன்மீக வாழ்க்கையை வளம்படுத்தி, அறநெறி கலந்த சிந்தனைகளையும், ஒழுக்க நெறிகளையும் உபதேசிப்பதோடு, ஆன்மிக மற்றும் பக்திநெறி சார்ந்த வாழ்க்கைக்கு ஏற்ற சாதனைகளையும் எடுத்துக்கூறும் நூலாகவும் திருமந்திரம் விளங்குகிறது.[1] சைவசமயிகளது ஆதார நூலாகவும், சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் தத்துவ நூலாகவும் இது அமைகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

சைவசமயத்தின் குறிக்கோளாக அமைவது முத்தியின்பத்தை அடைவதாகும். இதனையே வீடுபேறு என்ற பதத்தால் சைவப் பெரியார்கள் அழைக்கின்றனர். இவை பற்றிய கருத்துக்கள் சைவநூல்களாகிய வேதம், ஆகமம், உபநிடதம், திருமுறைகள், சைவசித்தாந்தம், திருமந்திரம், எனப் பலநூல்களில் பேசப்பட்டு வந்துள்ளன. சைவசமயமானது எமது வாழ்வில் இம்மை, மறுமை பற்றிக் கூறுகிறது. ஒருவன் செய்யும் நல்வினைகளும், தீவினைகளும் அவ்வவ்வினைகளுக்கேற்ப சொர்க்கத்தையும், நரகத்தையும் அளிக்கிறது. தத்துவநூல்களாகிய சைவசித்தாந்தங்கள் இம்மை, மறுமை பற்றிக் கூறுகையில் உயிர்கள் தாம் செய்யும் வினைகளுக்கேற்ப பயனை அனுபவிக்கும் எனக் கூறுகின்றன. ஆன்மாக்கள் கூறும் மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை. இவற்றிலிருந்து விடுபட்டு பக்குவநிலையை அடைவதன்மூலம் மலபரிபாகம் கிடைக்கும்போது சத்திநிபாதம் தானாகவே கிடைக்கும் என்பதனை ஞானம்

*பேராசிரியர், தலைவர், மொழியியல் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்*
*subathini128@yahoo.co*

என்கிறார்கள் அடியார்கள். சைவசித்தாந்தக் கருத்தியல்கள் திருமந்திரத்தில் எவ்வாறு பாடலடிகளாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை மொழிக்கூறுகளின் அடிப்படையில், அமைக்கப்பட்டுள்ள பண்பையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்தியல்கள்**

திருமூலரின் திருமந்திர வாக்குகளை நன்கு ஆராயும்போது ஆகமசாரம் அதிகமாகவும், வேதசாரம் பொதுவாகவும் காணப்படுவதைக் காணலாம். இதனையே திருமூலர் பின்வரும் பாடலடிகளால் குறிப்பிடுகிறார்.

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும்என்றுள்ளவை
நாதன் உரை அவை நாடில் இரண்டந்தம்
பேதம் அஃதென்பர் பெரியோர்க் கபேதமே [2]

நூற்சீர் அடிகொண்ட கவிவகையாப்பினால் அமைந்து இறைவழிபாட்டுடன் பாயிரத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் இந்நூலானது ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளமையை பின்வரும் பாடல் விளக்குகிறது.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம். உயர்சிந்தம். வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும்கா லோத்தரம்
துற்றநல் சுப்பிரம் சொல்லும் மகுடமே. [3]

**முப்பொருள் உண்மை**

மெய்கண்ட சாஸ்திரங்கள் சித்தாந்தம் எனப்படும் சிவாகமங்களின் ஞானபாதத்தை மட்டும் விளக்க, திருமந்திரம் சரியை முதலான நான்கு பாதங்களையும் விளக்குவதனால் அறிஞர்கள் இதனை தோத்திரநூலாகவும் குறிப்பிடுகின்றனர். சிவாகமங்களில் கூறப்படும் நான்கு பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய கருத்துக்களையும் உள்ளடக்கியதாக திருமந்திரம் விளங்குகிறது. ஆகவே இவ்வொன்பது ஆகமங்களின் கருத்துக்களையும் திருமூலரின் திருமந்திரப் பாடல்களில் காணலாம். திருந்திரப் பாடல்களில் காணப்படும் கருத்தியல்களில் ஒன்றான பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகள் அமைந்துள்ளமை பற்றி பின்வரும் பாடல்கள் அழகாக விளக்குகின்றன. இப்பாடல்கள் எவ்வாறு மொழிக்கூறுகளாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளமை என்பதைப் மேலும் பார்க்கலாம்.

**பதி/இறைவன்**

திருமந்திரம் சிவாகமங்களின் ஞான பாதம் கூறும் பதி, பசு, பாசம் என்ற வகையில் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் உள்ளடக்கப்படுகின்றன. இதனையே பின்வரும் திருமந்திரப் பாடல் அடிகள் எடுத்துச் சொல்கின்றன.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நில்லாவே . [4]

இதனை மொழிநடைக் கூறுகளுள் உள்ளடக்கிப் பார்க்கும்போது திருமூலர் கையாண்ட சொற்கள் முப்பொருளைக் குறிக்கும் பதியும், பசுவும், பாசமுமாகிய மூன்றும் ஆகும். இவை மூன்றும் பன்னிரண்டு இடங்களில் கையாளப்பட்டுள்ளமையை ஒவ்வொரு பாடலடிகளும் காட்டுகின்றன. அவ்வகையில் இரண்டாவது அடி ஒப்புமைப் பொருளிலும், ஏனைய இரு அடிகளும் ஒரேபொருளை வெவ்வேறு வகைகளில் புலப்படுத்துவதையும் காணலாம்.

இங்கு முப்பொருளில் ஒன்றான பதியை, சிவனை, இறைவனை பின்வரும் பாடலடிகள் விளக்கும் பண்பைக் காணலாம்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே. [5]

இதனைத் திருமூலர் பின்வருமாறு விளக்கியுள்ளார். நமது அகத்தைச் சிவத்தோடு சேர்ப்பதற்கு மனிதனிடத்தில் உள்ள அறிவுப் பிழம்பைப் பிரகாசிக்கச் செய்தல் வேண்டும். புறத்து அக்கினியானது ஆக்கவும், அளிக்கவும் வல்லது. இவ்வாறு அகத்திலுள்ள சிவாக்கினியும், அனைத்தையும் செய்யும் தன்மை உடையதாகும். இங்கு அன்பும், சிவனும் என்ற சொற்கள் திருமூலரின் உள்ளக் கிடக்கையை எவ்வாறு பாடலடிகளால் வெளிப்படுத்தலாம் என்பதையும், கையாண்ட விதத்தினையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல் அன்பு நிலைப்பட்டு வணங்குபவர்கள் பேரின்பத்தைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்பதை உறுதியோடு உணர்த்துவதற்காக எதிர்காலத்து நிகழ்வுகளை இறந்தகாலமாக மாற்றிப் பாடல் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக மேல்வரும் பாடல்களில் உள்ள இறந்தகால வினைமுற்றுக்களையும், எதிர்கால வினைமுற்றுக்களையும் இங்கு எடுத்துக் காட்டலாம்.

இறந்தகாலம் - அறிந்தார்
அமர்ந்திருப்பார்.

எதிர்காலம் - என்பர்
அறிவிலார் (அறியமாட்டார்)
அறிகிலார் (அறியவில்லை)

மேலும் பதிவழிநின்று இறைவனைப் போற்றும் அன்பர்க்கு விதிவழி நீங்கி நித்திய இன்பந்தளைக்க வேண்டுமானால் இறைவன் துதிவழி நிற்க வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது .

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்(று)
றாடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் யானின் றறிவது தானே.[6]

இங்கு காணப்படும் மொழிக்கூறுகள் எவ்வாறு இறைவனைப் பாடித் துதிக்கப் பயன்பட்டுள்ளன எனப் பார்க்கும்போது தன்மை இடத்தைக் குறிப்பிடும் நான் என்ற தன்மைப் பெயர் தோன்றா எழுவாயாக நின்று பயனிலைகளாக சூடுவன், பாடுவன், ஆடுவன், நாடுவன், வைப்பன் என சொல்முதலில் வைத்துப் பாடப்பட்டுள்ளன. அவைமட்டுமல்லால் வினை எச்சங்களாக தூவி, ஆடி, நாணி, பாடின்பனவும் என்று, நின்று போன்றவையும் இப்பாடலில் கையாளப்பட்டுள்ளன. இவை யாவும் திருமூலருடைய எண்ணங்களில் இறைவனின் மேலுள்ள அன்பானது வெளிப்படுத்தப்பட்டுள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றன.

சமய உலகில்நின்று திருமந்திரம் இறைவனை அர்ச்சிக்கும் வழியையும், அறத்தைப்பேச இறைவனைத் துணைக்கொள்வதும், சமூகத்தில் இன்சொல்பேசி பகுத்துண்டு வாழ்வதும், பசுவினைப் பேணுவதும் முதலிய வைதிகக் கடன், தெய்வீகக் கடன் என ஒருங்கு சேரும்போது அறத்தை முழுமையடையச் செய்கிறது. இதனைப் பின்வரும் பாடல் எவ்வாறு குறிப்பிடுகிறது எனப் பார்க்கலாம்.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே .[7]

இப்பாடலில் காணப்படும் நாலடிகளும் யாவர்க்குமாம் என்ற சொல்லை "எல்லோருக்கும்" என்ற பொருளை வெளிப்படுத்தும் வகையில் திருமூலநாயனார் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். இச் சொல்லானது தன்மை இடத்தின் உளப்பாட்டுத் தன்மை பன்மை, வெளிப்பாட்டுத் தன்மை பன்மை என இருவகைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஒரு பச்சிலை, ஒரு வாயுறை, ஒரு கைப்பிடி என்ற அளவுப் பெயர்களையும், பாடல் பொருளுக்கேற்ப பயன்படுத்தியுள்ளமை அப்பாடலின் சிறப்பாகும். இத்தகைய

மொழிசார்ந்த கூறுகள் பாடல்களின் தனித்துவத்துடன் சைவசித்தாந்தக் கருத்தியல்களையும் வெளிப்படுத்தும் திறனையும் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மனிதர்கள் உலக வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவர்கள். பந்த பாசங்கள் என்ற மாயக் கயிற்றால் தளைக்கப்பட்ட இவர்களால் சிலையாகவும், படமாகவும் இருக்கும் இறை உருவங்களை மட்டுமே காணமுடியும். முத்தியாக, ஞானமாக, முத்தமிழ் ஓசையாக, சோதியாக இறைவனை உணர முடியாது. இதனைத் திருமூலர் பல பாடலடிகளால் நிறுவுகின்றார்.

சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தம் சிவானந்தம் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாஞ்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே. [8]

இப்பாடல் சொல்லடுக்குகளால் அழகாகப் பாடப்பட்டுள்ளன. "சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகிவிடும்" என்பதைச் "சித்தத்தைச் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன்" என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகின்றது. சித்திக்கும் முத்திக்கும் வழிகாட்டும் அன்பியல் வாழ்க்கை, அருளியல் வாழ்க்கை, இன்பியல் வாழ்க்கை ஆகிய மூன்றும் ஒருங்கேகிட்டும். முன்னைத் தவத்தின் பயனாக சித்தம் சிவமாகியர் உறவு உண்டாகி, சித்தியும் முத்தியும் ஒருங்கே கிட்டும் என மேல்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

**பசு/ஆன்மா**

இறைவனைப் பதி என்றும், உயிர்களைப் பசு என்றும், உலகமாகிய பொருட்களை பாசம் என்றும் அழைப்பது சைவசித்தாந்த மரபாகும். சைவசித்தாந்தக் கொள்கையின்படி உயிர்கள் எண்ணிறைந்தவை. பதியினைப் போல் பசுக்களும் அநாதி. ஆன்மா பற்றி சிறப்பித்துக்கூறும் திருமூலர், அது உயிர் நிலையானது, அழிவற்றது என்கிறார். அதன் தொடக்கமும், இறுதியும் அறியமுடியா தவையாக உள்ளன என்கிறார். இவரின் வாதப்படி உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனது உருவங்கள் என்கிறார். உயிரில் இறைவன் எவ்வாறு அமைந்துள்ளான் என்பதைப் பல பாடல்கள் மூலம் தெளிவாக்கியுள்ளார்.

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்
டணுவில் அணுவை அணுகவல் லார்கட்
கணுவில் அணுவை அணுகலு மாமே. [9]

அணுவிற்கணுவாய் விளங்கும் சிவன், ஆயிரங்கூறு செய்து அதனுட் கலந்திருப்பவன். அவனை அணு அணுவாய் தியானிப்பவன் அவனை அணுகலாம் என்பதை "அணு" என்ற வார்த்தையை வைத்து அழகாக மேற்கூறிய பாடலை திருமூலர் இயற்றியுள்ளார். இது இப்பாடலின் மொழிக்கூறுகள் அழகாகப் பொருத்தப்பட்டுள்ள தன்மையை வெளிப்படுத்துகின்றன.

இதேபோன்றே பின்வரும் பாடலும் "அணு" என்ற வார்த்தையை வைத்து சிறிது வேறுபடுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரந் தானே. [10]

இது ஆன்மாவில் சிவனும், சிவத்தில் ஆன்மாவும் பிரிப்பின்றிக் கலந்திருப்பதை உணரார். ஒப்பற்ற ஈசன் எங்கும் நிறைந்து, இடையீடறச் செறிந்துஎவற்றினும் வியாபித்திருக்கிறார் என்பதை விளக்குகிறது. இவ்வாறு விளக்குவதற்கு திருமூலர் கையாண்ட மொழிக்கூறுகளை வகைப்படுத்தினால், படர்க்கை இடப்பெயர்கள் பல இங்கு

கையாளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக அவன், அவர் போன்றவை. இங்கு அவன் என ஆண்பால் ஒருமை இடத்திலும், அவர் என ஆண்பால் மரியாதை வழக்கிலும் இறைவனை விழித்திருப்பதைக் காணலாம்.

வேதாந்தங்களை முழுதும் கற்ற உயிர்கள் பொருள், அனுபவம் இன்றிக் கத்திக்கொண்டு சுற்றினாலும், தம் நினைவுண்மையால், பேச்சாற்றலால் பட்டிமண்டபங்களில் வெற்றிகண்ட பசுக்கள் தமக்குரிய விருதுகளைக் கட்டிக்கொண்டு மேய்ந்தாலும், சிவானுபவத்தில் முற்றிய பசுக்கள்[11] கறக்கின்ற ஒரு குடம்பாலே உலகத்திற்கு அமையும், ஏனைய பசுக்கள் வறட்டுப் பசுக்களே எனப் பாடும்பாடலானது பின்வருமாறு அமைகிறது

கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள் பசுதானே.[12]

இங்கு மேலேயுள்ள பாடலில் சிறப்பித்துக் கூறக்கூடியதாகக் காணப்படும் பெயரெச்சங்களாகக் கற்றபசு, கொற்றபசு, முற்றபசு, மற்றபசு என்பனவும்,'உம்' இடை, சொற்களைக் கொண்டு முடியும் சொற்களான திரியினும், மேயினும் போன்றவையும் இதன் நடைச்சிறப்புக்கு அணி செய்வனவாக அமைகின்றன. திருமூலரின் இச்சொற்கையாளல்கள் முப்பொருளில் ஒன்றான ஆன்மாவின் சிறப்பை புலப்படுத்தும் தன்மை போற்றற்குரியதாகும்.

சிவனும் சீவனும் ஒன்றென்று கூறியதன்று, ஒன்றைவிட்டு ஒன்று அறியாமையின் கலந்து நின்று காண்பதன்றித் தனியே காணாது. சீவனெனவும், சிவன் எனவும் வேறில்லை, சீவன் சிவனை அறியாது என்பதை மிக அழகாகப் பின்வரும் பாடலில்பாடப்பட்டுள்ளமையை அறியலாம்.

சீவனெனச் சிவனென்னவே றில்லை
சீவனார் சிவனுரை யறிகிலார்
சீவனார் சிவனுரை யறிந்தபின்
சீவனார் சிவனுயிட் டிருப்பரே.[13]

இங்கு சீவனும், சிவனும் ஒன்றுக்கொன்று இப்பாடலில் வினையடியாயுள்ள முறைமையானது திருமூலரின் திருமந்திரப் பாடலழகின் சிறப்பை உணர்த்துகிறது. மேலும் திருமந்திரத்தில் ஆன்மாக்களுக்கு தத்துவ தரிசனம் முதலி யன உணர்த்தியமையையும், அவற்றை உணர்த்தியபின் ஆன்மா இறைவனோடு ஒன்றிய நிலையையும் பின்வரும் பாடல் மூலம் திருமூலர் எடுத்தியம்புகிறார்.

ஆறாறின் தன்மை அறியா திருந்தேனுக்
காறாறின் தன்மை அறிவித்தான் போநந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்த பின்
ஆறாறுக் கப்புற மாகிநின் றானே.[14]

இங்கு ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பை அறியாதிருந்த அடியேனுக்கு அவற்றினிலக்கணத்தை அறிவித்தான் என்பதை மிக நேர்த்தியாக "ஆறு" என்ற சொல்லை வைத்து அமைத்துள்ள முறையானது மொழிநடைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். அதுமட்டுமல்லாமல் வேற்றுமையின் பல வடிவங்களும் இங்கு தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக அறியாத, அறிவித்தான், அருளால் அறிந்தபின் என ஒவ்வொரு பாடலடிகளும் அமைந்துள்ளமை இதன் சிறப்பாகும்.

ஆன்மாக்களாகிய எங்களுக்கு நாடோறும் சிவபெருமான் செய்யும் அருட்டொழில்கள் பல நம்வினைக்கேற்ப இன்ப துன்பங்களைப் பிரித்துக் கொடுப்பவனும், ஆன்மா எல்லாம் சிவன் செயல், சிவன் தந்த செல்வம் என்று எண்ணுபவனும் இறைவனே. இதனையே சைவசித்தாந்தக் கருத்தியல்களினூடாக திருமூலர் வெளிப்படுத்துகிறார்.

நாடோறும் ஈசன் நடத்துந் தொழில் உன்னார்
நாடோறும் ஈசன் நயந்தூட்டல் நாடிடார்
நாடோறும் ஈசன் நல்லோர்க்கருள் நல்கலால்
நாடோறும் நாடார்கள் நாள் வினையாளரே.[15]

இங்கு கையாளப்பட்ட சொற்றொடர்கள் நாடோறும், நயந்தூட்டல், நல்லோர்க்கருள், நாடார்கள் என்பவை இப் பாடலுக்குரிய சிறப்பு அமைப்புக்களாகும். இவை ஈசன் என்ற சொல்லை முதற்சொல்லாகக் கொண்டு அதனோடு இணைந்த தொடர்களாக, மிக கருத்துபூர்வமாக திருமந்திரத்தில் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன. இவை அப் பாடலுக்குரிய மொழிநடை அமைப்புக்கு அரண்சேர்ப்பதாக அமைகின்றன. இத் தகைய மொழிக்கூறுகள் சைவசித்தாந்த கருத்தியல்களை வெளிப்படுத்தும் தன்மை கொண்டதாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பாசம் / பற்று**

சைவசித்தாந்தம் கூறும் பாசம் மூன்றாகும். இதில் ஆணவம், கன்மம், மாயை என மூவகை மலங்கள் காணப்படுகின்றன. உலகில் உள்ள எல்லாவற்றின்மீதும் வைக்கும் பற்றிலிருந்து நீங்கிஇ இறைவனிடத்தில் பேரின்பம் உய்யச் செய்யும் வழியை திருமூலர் தனது பாடல்களின் மூலம் காட்டியுள்ளார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.[16]

இப்பாடலடியில் வரும் ஆசை என்ற சொல்லானது ஐந்து தடவைகள் தரப் பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் படப்பட, விடவிட போன்ற இரட்டைச் சொற்களும் திருமூலரின் இலக்கண அறிவுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொதுவாகச் சைவசித்தாந்தக் கோட்பாட்டில் பதி - பசு - பாசம் என்னும் முப்பொருளுண்மையை திருமூலர் வேறாக்கிப் பார்க்காமல் மூன்றையும் ஒன்றாகவே பார்க்கும் தன்மையினை பின்வரும் பாடல்மூலம் விளக்குவதனைக் காணலாம்.

அறிவறி வென்ற அறிவும் அனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியிற் பிறப்பறுந்தானே.[17]

இங்கு அறிவு என்ற சொல்லானது பாடலடிகள் யாவிலும் பதி பசு பாசம் யாவும் அனாதி எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறுகிறது. இங்கு இச்செய்யுளின் வரன்முறை, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருளில் வருவதனைக் காணலாம். இச்சொல் கையாளப்பட்ட முறையானது மேலும் நடையின் சிறப்பை வெளிப்படுத்துகிறது. அதாவது அறிவறி, அறிவுக்கறிவு, அறிவினைக் கட்டிய, அறிவுபதி என்று வெவ்வேறு நிலையில் இச்சொற்கள் அமைக்கப்பட்டு பாடப்பட்டுள்ளன.

மேலும்பின்வரும்பாடல்முப்பொருள்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயினும், அவற்றின் பொருள் வேறு என்பதையே குறிப்பிடுகிறது. பாசத்தில் கட்டுப்பட்டிருக்கும் உயிரே பசு உபாசனையால் பசு பதியாகும். பதியே பாசமாகிறது. பதி பாசமாகிய நாதமாக விளங்கும் என்னும்போது இறைவனே உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிவிடுகிறான்.[18]

பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே .[19]

இங்கும் பாசம் என்ற சொல் கையாளப்பட்ட விதமானது அதன் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. திருமூலர் மிக எளிய சொற்களை

எளிய முறையில் கையாண்டதன் மூலம், பாடல்களின் பொருளைப் பாமரரும் விளங்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பைக் கொடுத் திருக்கிறார். இது அவரின் தமிழறிவுத் திறனுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இப்பாசம் பற்றிக் குறிப்பிடும் திருமூலர் அதனை மூன்றாக நோக்கி விளக்குகிறார்.[20] ஆன்மாவைப் பீடித்துள்ள மும்மலங்கள் ஆவணம், கன்மம், மாயை என்பனவாகும். ஆணவமலம் குறித்த கருத்தியல்கள் ஐந்தாம், எட்டாம் தந்திரங்களில் காணப்படுவதை திருமூலர் பின்வரும் பாடல்களால் குறிப் பிடுகிறார்.

ஆணவமாதி மலம் ஐந்து அலரோனுக்கு
ஆணவமாதி நான்காமாற்கு அரனுக்கு
ஆணவமாதி மூன்றுஈசர்க்கு இரண்டென்ப
ஆணவமொன்றே சதாசிவற் காவதே .[21]

இங்கு ஆணவம் என்ற சொல் பலவித வடிவங்களுக்கூடாகக்கையாளப்பட்ட தன்மை சிறப்பானதாகும். இது ஆணவமலத்தின் தன்மையை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த உத்திமுறையாக இப்பாடல்களின் மூலம் வெளிப்படுகிறது. இவ்வாணவம் என்ற சொல்லின் பொருளாக இருள், அகங்காரம், அஞ்ஞானம், அறியாமை போன்ற சொற் பதங்களும் இங்கு கையாளப்பட்டுள்ளமை அதன் சிறப்பாகும்.

**நிறைவுரை**

இவ்வாறாக சைவசமயத்தவரின் சிந் தனையில் முகிழ்த்த சைவசித்தாந்தம் என்ற உயர் தத்துவங்களின் கருத்தியல்கள் திருமந்திரம் என்னும் தமிழ் மந்திர நூலினூடாக வெளிப்பட்டிருப்பது அதன் தனித்துவமாகும். திருமூலர் தாம் கையாண்ட மொழிநடைக் கூறுகளைக் கொண்டு சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளை அவரின் எளிய, கருத்தாழமிக்க பாடல்களில் சிறப் பாக வெளிப்படுத்தியுள்ளார். அனுபவ ஞானத் திருநூலான இது சைவசித்தாந்தக் கருத்தியல்களை அதன் சொல்லாட்சி, மொழியாற்றல், செய்யுள் நடை இலக்கணத் தெரிவு, பல்வேறு நடை உத்திகள் போன்ற மொழிநடைக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளமை அதன் சிறப்பாகும். அதாவது பதி, பசு, பாசம் என்னும் முக்கோட்பாடுகள் மக்கள் தம் வாழ்வில் கண்டவற்றையும், பட்டறிந்தவற்றையும், உரைக்கும் செய்திகளாகத் திருமந்திரத்தினூ டாக தெளிவுறத் தொகுத்துக் கூறப்பட் டுள்ளன. மேலும் திருமந்திரப் பாடல்கள் இவரின் மொழித்திறன், அவர் கை யாண்ட மொழிக்கூறுகளினூடாக மதிப்பிடக்கூடிய தாகும்.

இங்கு திருமூலர் கையாண்டுள்ள மொழி எளிமையும், தெளிவும், ஓசை நயமுமிக்க தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளன. சைவசித்தாந்தக் கருத்தியல்களை வெளிப் படுத்தும் சொற்களை, சொற்றொடர்களை திருமூலர் மீண்டும், மீண்டும் தனது பாடல்களை கையாண்டு கொண்டதன் மூலம் அவை சைவசமயத்தவர் மத்தியில் இறையுணர்வை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது.

அவ்வகையில் திருமூலரும் தனது பாடல்களில் சொல்லாட்சி, வேகம், நயம் முதலியவற்றைக் கையாண்டதன் மூலம் தனக்கென ஒரு வடிவத்தையும், பொருளையும் அமைத்துக்கொண்டு, அவற்றினூடாக சைவசித்தாந்தக் கருத்தியல்களை மக்களுக்கு ஊட்ட முற்பட்டு அதில் வெற்றி பெற்றுள்ளார் எனக் குறிப்பிடலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. மணிவாசகன், (2009).திருமந்திரம். சாரதா பதிப்பகம், சென்னை, ப. 332
2. மேலது, பா. 2397
3. மேலது, பா. 63
4. மேலது, பா. 115
5. மேலது, பா. 257
6. மேலது, பா. 50
7. மேலது,பா. 252
8. மேலது,பா. 1644
9. மேலது, பா. 2008
10. மேலது,பா. 2010
11. மகாலிங்கம், சிவ. (2013),தவமுனிவரின் தமிழ் மந்திரம். சிவஜோதி, கோண்டாவில்
12. மணிவாசகன் (2009),மு.கு.நூ. பா . 2015
13. மேலது,2017
14. மேலது,2020
15. மேலது,2022
16. மேலது,2615
17. மேலது,2405
18. அருணாசலம், ப,(1982), திருமந்திரக் கோட்பாடு.பாரி புத்தகப்பண்ணை, சென்னை,
19. திருமந்திரம் :பா. 2423
20. மணிவாசகன் (2009) ,மு.கு.நூ.பா . 2183
21. சுத்தானந்த பாரதியார், (1953), திருமந்திரவிளக்கம். சுத்தானந்த பதிப்பகம், தமிழ்நாடு.